**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.T. C. No. 227/2025** |
| Prosecution witness | : | P.W. 4 |
| List of witness | : | L.W.6 |
| Name | : | சந்தானம் |
| Father's /Husband Name | : | முருகையன் |
| Village | : | செருகளத்தூர் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 36 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 17th day of April 2026. Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வந்து விவசாயம் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து ஊர்க்காரர் ஆவார். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். கடந்த 01.02.2024 ம் தேதி சுமார் மாலை 06.00 மணிக்கு அ.சா.1 சாலையை கடக்கும்போது விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். அந்த வழக்கு சம்மந்தமாக என்னை குடவாசல் போலீசார் 03.02.2024 ம் தேதி காலை 09.00 மணியளவில் சம்பவ இடத்திற்கு வந்து என்னையும் அங்கிருந்த அருண்குமார் என்பவரையும் சாட்சியாக வைத்து விசாரணை செய்து எங்கள் முன்பாக வரைபடம் மற்றும் புகைப்படம் எடுத்துகொண்டார்கள். மேற்படி பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்டுகிறது.** அதன் பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதி இருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் சம்பவம் நடந்ததை பற்றி எழுதியுள்ளதாக சொன்னார்கள். நான் வெறும் தாளில் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. நான் தமிழில் கையொப்பம் செய்வேனா என்றால் எப்பொழுதும் ஆங்கிலத்தில் தான் கையொப்பம்

செய்வேன். நான் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் எந்த கையொப்பமும் செய்யவில்லை என்றாலும் போலீசார் கேட்டுகொண்டதால் தற்போது சாட்சியமளிக்கறேன் என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.17 12:25:20 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.